<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

**<u>OS No. 200 /2021</u>**

**நாள் : 04.01.2024**

**PW1 : மணி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் பாகம் கோரி வழக்கு போட்டுள்ளேன். மற்ற பரிகாரங்கள் குறித்து சொல்ல முடியாது. நான் என்னுடைய சாட்சியத்தை எனது சகோதரி ராஜேஸ்வரிக்காகவும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும்போது என்னுடைய தாயார் சின்னராமாக்காள் உயிருடன் இருந்தார். என் சகோதரர் பெயர் சாமிநாதன் என்றால் சரிதான். அவர் காலமாகிவிட்டதால், அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது பாகம் கேட்டு நான் வழக்கு போட்டுள்ளேன். எனக்கு தற்போது 60 வயதாகிறது. 1950 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை Ex.A1 ஏற்படும்போது நான் பிறக்கவில்லை. எனவே, அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். லட்சுமண கவுண்டர் என் தந்தையின் தந்தை ஆவார். என் தந்தை பெயர் ராமசாமிக்கவுண்டர். நான் தாக்கல் செய்துள்ள Ex.A1 பற்றி எனக்கு விவரம் தெரியாது.

2) மேற்படி 1950 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தரப்பினர்களுக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை. ராஜேஸ்வரி எனது இளைய சகோதரி ஆவார். 1963 ஆம் ஆண்டில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு 17, 18 வயதிருக்கும். எனக்கு அப்போது 9 வயதுதான் இருக்கும் என்றால் சரிதான். 1963 ஆம் ஆண்டு பெற்ற கிரையம் என்னுடைய சித்தப்பாவும், என் தந்தையும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. 1950 ஆம் ஆண்டு சொத்துக்களின் வருமானத்தைக் கொண்டு வாங்கவில்லை என்றும், தனது சுய சம்பாதியத்தின் மூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

3) என்னுடைய சித்தப்பாவும், என் அப்பாவும் 1984 ஆம் ஆண்டு, 1963 ஆம் ஆண்டு கிரையம் பெற்ற சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சொத்துக்களின் காலை எண் எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K. Suresh Kumar,
Subordinate Judge,
Avinashi.